2013 அக்டோபர் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.*

*முற்பகல் 11-20*

## 4. அரசினர் தனித் தீர்மானம்

### இலங்கையில் நடைபெறவுள்ள காமன்வெல்த் கூட்டமைப்பு மாநாட்டினை இந்தியா முற்றிலும் புறக்கணித்து, இலங்கைத் தமிழர்கள் சிங்களர்களுக்கு இணையாக வாழ இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும்வரை அக்கூட்டமைப்பிலிருந்து அந்நாட்டை நீக்கி வைக்க இந்திய அரசை வலியுறுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009 ஆம் ஆண்டு இலங்கை உள்நாட்டுப் போர் உச்சகட்டத்தில் இருந்த நிலையில், சர்வதேச சட்டம் மற்றும் ஜெனிவா ஒப்பந்தத்தில் உள்ள போர் விதிமுறைகளை முற்றிலும் மீறி, இலட்சக்கணக்கான அப்பாவி இலங்கைத் தமிழர்களைக் கொன்று குவித்து ஓர் இனப் படுகொலையை இலங்கை அரசாங்கம் நடத்தியது.*

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 அக்டோபர் 24

இலங்கை அரசின் இந்த இனப் படுகொலையையும், ஈவு இரக்கமற்ற இழிசெயலையும், மனிதாபிமானமற்ற தன்மையையும், மனிதநேயமற்ற நடவடிக்கையையும், இலங்கைத் தமிழர்களை அழிக்க இந்திய அரசு ஆயுதங்கள் வழங்கியது மற்றும் பயிற்சிகள் அளித்த நடவடிக்கையையும் நான் ஆரம்பத்திலிருந்து எதிர்த்து வந்திருக்கிறேன். இலங்கை அரசின் அராஜகச் செயலைக் கண்டித்து தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள், மாணவ-மாணவியர், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், கலைத் துறையினர் என அனைத்துத் தரப்பினரும் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், உண்ணாவிரதம் எனப் பல்வேறு போராட்டங்களை நடத்தினர். இலங்கை நாட்டிற்கு எதிராக உலகம் முழுவதிலிருந்தும் கண்டனக் குரல்கள் எழுப்பப்பட்டன.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரால் நியமனம் செய்யப்பட்ட குழு தனது ஆய்வில், பரவலாக குண்டுமழை பொழிந்து அப்பாவி மக்களைக் கொன்று குவித்தது; மனிதர்கள் வாழும் இடங்களின்மீதும், மருத்துவமனைகள்மீதும் குண்டுகளை வீசியது; மனிதாபிமான முறையில் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்ய மறுத்தது; உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகப்படக் கூடியவர்கள் உட்பட இந்தச் சண்டையில் பலியானவர்கள் மற்றும் எஞ்சியுள்ளவர்கள்மீது மனித உரிமை மீறல்கள் நிகழ்த்தியது; இலங்கை அரசை விமர்சிப்பவர்கள் மற்றும் ஊடகங்கள் உட்பட போர்ப் பகுதிக்கு வெளியே இருப்பவர்கள்மீது மனித உரிமை மீறல்களை நிகழ்த்தியது உட்பட பல்வேறு கடுமையான குற்றங்களை இலங்கை அரசு நிகழ்த்தியுள்ளதாகத் தெரிவித்தது.

இந்தச் சூழ்நிலையில் 2011 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நான், அப்பாவி இலங்கைத் தமிழர்கள்மீது ஈவு இரக்கமற்ற முறையில் தாக்குதல் நடத்தியவர்களைப் போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் எனவும், இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவரும், தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பி சிங்களர்களுக்கு இணையாக கண்ணியமாக வாழ வகைசெய்யும் வரையில், அனைத்துக் குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும் வரையில்,

2013 அக்டோபர் 24] [செல்வி ஜெ ஜெயலலிதா]

மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசின்மீது பொருளாதாரத் தடையை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரும் தீர்மானத்தினை 8-6-2011 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முன்மொழிந்தேன். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் இந்த மாமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. ஆனால், இந்தத் தீர்மானத்தின்மீது இது நாள்வரை இந்திய அரசு எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து இலங்கை இராணுவ வீரர்களுக்குத் தமிழ்நாட்டில் பயிற்சி அளிக்கவும், சிங்களர்கள் தமிழ்நாட்டில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ளவும், மத்திய அரசு அனுமதி வழங்கியது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததோடு, இலங்கை இராணுவ வீரர்களுக்கு, இந்தியாவில் எங்கும் பயிற்சி அளிக்கக்கூடாது என்று நான் பாரதப் பிரதமருக்கு கடிதங்கள் எழுதினேன். இதன் விளைவாக, தமிழ்நாட்டில் இலங்கை இராணுவ வீரர்கள் பயிற்சி பெறுவது ரத்துச் செய்யப்பட்டது.

இருப்பினும், இலங்கை அரசு அங்கு வாழும் தமிழர்களுக்குத் தேவையான மறுவாழ்வுப் பணிகளைச் சரிவர மேற்கொள்ளவில்லை என்றும், தமிழர்கள் இரண்டாம் தர குடிமக்களாகக் கருதப்படுவது தொடர்கிறது என்றும் தகவல்கள் வரப்பெற்றன. இதுமட்டுமல்லாமல், தமிழர்கள்மீது நிகழ்த்தப்பட்ட கொடுமைகள் குறித்து புதிய ஆதாரங்களை ஊடகங்கள் வெளியிட்டன. இதன் காரணமாக ஒட்டுமொத்த தமிழ்நாடே கொதித்தது.

இதனைத் தொடர்ந்து, 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இலங்கை நாட்டில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டினை வேறு நாட்டிற்கு மாற்றுவதற்கான முயற்சிகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும் என்றும், இலங்கையில் நடைபெறும் இந்த மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக் கூடாது என்றும் தெரிவித்து 25-3-2013 அன்றே கடிதம் வாயிலாக, மாண்புமிகு பாரதப் பிரதமரை நான் கேட்டுக்கொண்டேன்.

முற்பகல் 11-25

இது மட்டுமல்லாமல், 27-3-2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், இலங்கை நாட்டை "நட்பு நாடு" என்று சொல்வதை இந்திய அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும், இலங்கை

இனப் போரின்போது நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலை மற்றும் போர்க் குற்றங்கள் குறித்து சுதந்திரமான, நியாயமான சர்வதேச புலன் விசாரணை நடத்திடவும், இந்த சர்வதேச விசாரணையின் அடிப்படையில் போர்க் குற்றம் நிகழ்த்தியவர்கள் சர்வதேச நீதிமன்றம் முன்பு நிறுத்தப்பட்டு, அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுத் தந்திடவும், தமிழர்கள் மீதான அடக்குமுறையை இலங்கை அரசு நிறுத்தும்வரை இலங்கை நாட்டின்மீது பொருளாதாரத் தடையை விதித்திடவும், ஈழத் தமிழர்களின் எதிர்கால நலனைக் கருத்தில்கொண்டு தனி ஈழம் குறித்து இலங்கைவாழ் தமிழர்களிடமும், இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து பிற நாடுகளில் வாழும் தமிழர்களிடமும் பொது வாக்கெடுப்பு நடத்திடவும், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவில் தீர்மானத்தினைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்னும் அரசினர் தீர்மானத்தினை நான் முன்மொழிந்தேன். அது இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதன்மீதும் மத்திய அரசு எவ்விதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இந்தச் சூழ்நிலையில், தமிழக மக்களின் உணர்வுகள் உட்பட, அனைத்துக் காரணிகளையும் பரிசீலித்து, இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டில் தான் கலந்துகொள்வது குறித்து ஒரு முடிவு எடுக்கப்படும் என்று பாரதப் பிரதமர் தெரிவித்துள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வந்துள்ளன. இந்த காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்று தமிழக மக்கள் வலியுறுத்தி வரும் சூழ்நிலையில், மாண்புமிகு பாரதப் பிரதமர் தன்னுடைய பங்கேற்பு பற்றி மட்டும் கருத்துத் தெரிவித்துள்ளது தமிழக மக்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.

காமன்வெல்த் நாடுகளின் தலைவரான இரண்டாம் Queen Elizabeth அவர்களால் காமன்வெல்த் நாளான 11-3-2013 அன்று கையெழுத்திடப்பட்ட காமன்வெல்த் சாசனத்தில், மனித உரிமைகள் என்ற தலைப்பின்கீழ், "We are committed to the Universal Declaration of Human Rights and other relevant human rights covenants and international instruments. We are committed to equality and respect for the protection and promotion of civil, political, economic, social and cultural rights including the right to development for all, without discrimination on any grounds as the foundation of peaceful, just and stable societies. We note that these rights are universal, indivisible, interdependent and inter-related and cannot be implemented selectively.

2013 அக்டோபர் 24] [செல்வி ஜெ ஜெயலலிதா]

We are implacably opposed to all forms of discrimination whether rooted in gender, race, colour, creed, political belief or other grounds" என்று கூறியுள்ளார்.

அதாவது, மனித உரிமைகள் குறித்த பொதுவான பிரகடனம், இதர தொடர்புடைய மனித உரிமைகள் குறித்த உடன்பாடுகள் மற்றும் இதர சர்வதேச ஆவணங்கள் ஆகியவற்றைப் பின்பற்றுவதில் உறுதியாக இருக்கிறோம் என்றும், அமைதி, நியாயம் மற்றும் நிலையான சமூகங்கள் ஆகியவற்றின் அடிப்படையாக விளங்கும் வளர்ச்சி உரிமை உட்பட சமூக, அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார சம உரிமைகளைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் வழிவகுக்கும் சம உரிமை மற்றும் கண்ணியத்தை எவ்வித பாகுபாடுமின்றி அனைவருக்கும் வழங்கவும் உறுதி பூணுகிறோம் என்றும், இந்த உரிமைகள் அனைத்தும் பொதுவானவை, பிரிக்க முடியாதவை, ஒன்றுக்கொன்று சார்புடையவை, ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்றும், இதில் சிலவற்றை மட்டும் தெரிந்தெடுத்து செயல்படுத்த முடியாது என்றும் காமன்வெல்த் சாசனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாலினம், இனம், நிறம், மதம், அரசியல் நம்பிக்கை அல்லது வேறு காரணங்களுக்காக ஏற்படுத்தப்படும் வேறுபாடுகளைக் கடுமையாக எதிர்க்கிறோம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், இந்தக் கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் முற்றிலும் முரணாக இலங்கை அரசு செயல்பட்டு வருகிறது.

காமன்வெல்த் நாடுகளின் முக்கியமான கொள்கைகளையும், கோட்பாடுகளையும் நிலைநிறுத்த முன்வராத இலங்கை நாட்டில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டில் தான் கலந்துகொள்ளப் போவதில்லை என்று கனடா நாட்டு பிரதமர் அறிக்கை விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் காமன்வெல்த் கூட்டமைப்பு தொடர்ந்து உகந்த வகையில் திகழ வேண்டுமென்றால் சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் மனித கண்ணியத்தை மதித்தல் போன்ற அடிப்படைக் கொள்கைகளின் அஸ்திவாரத்தில் அமைக்கப்பட்ட காமன்வெல்த் அமைப்பு அவற்றை நிலைநிறுத்த வேண்டும் என்று கனடா நம்புகிறது. கனடா நாட்டு மக்களால் பெரிதும் போற்றப்படும் காமன்வெல்த் நாடுகளின் இந்த முக்கியக் கொள்கைகளை நிலைநிறுத்த இலங்கை அரசு தவறிவிட்டதால்,

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 அக்டோபர் 24

கனடா நாட்டு பிரதமர் என்ற முறையில் இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டில் தான் கலந்துகொள்ளப் போவதில்லை என்று அறிவித்திருக்கிறார்.

முற்பகல் 11-30

அதாவது, “Canada believes that if the Commonwealth is to remain relevant it must stand in defence of the basic principles of freedom, democracy and respect for human dignity, which are the very foundation upon which the Commonwealth was built. It is clear that the Sri Lankan Government has failed to uphold the Commonwealth’s core values which are cherished by Canadians. As such, as the Prime Minister of Canada, I will not attend the 2013 Commonwealth Heads of Government Meeting in Colombo, Sri Lanka” என்று கனடா நாட்டுப் பிரதமர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

அவருக்குப் பதிலாக வெளியுறவுத் துறை அமைச்சரின் நாடாளுமன்றச் செயலர் பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் மிகக் குறைவாக வசிக்கும் கனடா நாடே இது போன்றதொரு முடிவை எடுத்து பெயரளவில் ஒருவரை அனுப்பவுள்ள சூழ்நிலையில், எட்டு கோடி தமிழர்கள் வசிக்கும் இந்தியா இந்த மாநாட்டில் பெயரளவிலும் கலந்து கொள்ளாது என்னும் தீர்க்கமான முடிவை (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இன்னமும் எடுக்காதது துரதிர்ஷ்டவசமானது. தமிழர்களின் உணர்வுகளுக்கு மத்திய அரசு சிறிதும் மதிப்பளிக்கவில்லை என்பதையே இது காட்டுகிறது.

இவற்றை எல்லாம் சுட்டிக்காட்டி, நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டினை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்றும், பெயரளவிற்குக்கூட ஒருவரும் அந்த மாநாட்டில் கலந்துகொள்ளக் கூடாது என்றும் தெரிவித்து, இதுபோன்ற நடவடிக்கை இலங்கைத் தமிழர்கள்மீது நியாயமான அணுகுமுறையை இலங்கை அரசு எடுக்க வழிவகுக்கும் என்றும் கோடிட்டுக்காட்டி, ஒரு விரிவான கடிதத்தினை நான் பாரதப் பிரதமருக்கு 17-10-2013 அன்று எழுதியுள்ளேன். தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் இதே கோரிக்கையினை வலியுறுத்தி வருகின்றன. எனினும் மத்திய அரசு இந்தப் பிரச்சினை தொடர்பாக ஒரு திடமான, தீர்க்கமான முடிவை இன்னமும் எடுக்கவில்லை.

2013 அக்டோபர் 24] [செல்வி ஜெ ஜெயலலிதா]

ஒட்டுமொத்த தமிழக மக்களின் கோரிக்கைக்கு மேலும் வலு சேர்க்கும் வகையிலும், தமிழக மக்களின் உணர்வுகளைத் தெரிவிக்கும் வகையிலும், கீழ்க்காணும் தீர்மானத்தினை நான் முன்மொழிகிறேன்:

**தீர்மானம்**

"தமிழக மக்களின் ஒருமித்த கருத்திற்கும், உணர்வுகளுக்கும் மதிப்பளித்து இந்த ஆண்டு நவம்பர் மாதம் இலங்கை நாட்டில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டினை இந்தியா முற்றிலுமாகப் புறக்கணிக்க வேண்டும் என்றும்; பெயரளவிற்குக்கூட இந்திய நாட்டின் சார்பாக பிரதிநிதிகள் அந்த மாநாட்டில் கலந்துகொள்ளக் கூடாது என்றும்; இது குறித்த இந்தியாவின் முடிவை உடனடியாக இலங்கை நாட்டிற்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும்; இலங்கைத் தமிழர்கள் சுதந்திரமாகவும், சிங்களர்களுக்கு இணையாகவும் வாழ இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும்வரை காமன்வெல்த் கூட்டமைப்பில் இருந்து இலங்கை நாட்டை தற்காலிகமாக நீக்கி வைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் இந்தியப் பேரரசை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது". *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

என்னால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தினை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தத் தீர்மானத்தில் அனைத்துக் கட்சி உறுப்பினர்களுக்கும் ஒருமித்த கருத்து உள்ளதால் உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைச் சுருக்கமாகக் கூறக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

*முற்பகல் 11-35*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகளாவிய 10 கோடி தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மொழியாய், அவர்கள் கண்ணீர் விடுகிறபோதெல்லாம் அந்தக் கண்ணீரைத் துடைக்கும் கரங்களாய், அவர்களுடைய

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2013 அக்டோபர் 24

உரிமைகளுக்குக் குரலாய், ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயத்தின் வடிவமாய் வாழ்ந்துகொண்டிருக்கின்ற போற்றுதலுக்குரிய நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலே கொண்டு வந்திருக்கின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அரசினர் தனித் தீர்மானத்தை வரவேற்பதிலே நாங்கள் நெஞ்சமெல்லாம் நிறைவடைகிறோம்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏதோ இன்றைக்கு ஓர் அரசியல் நோக்கோடு இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறார்கள் என்று யாரும் கருதிவிடமுடியாது. எப்போதெல்லாம் இலங்கைத் தமிழர்கள் கண்ணீர் விடுகிறார்களோ, அப்போதெல்லாம் இந்திய, தேச இறையாண்மைக்கும் இந்திய தேசியத்திற்கும் ஓர் இலக்கணமாய்த் திகழ்ந்துகொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற வகையிலே ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நம்முடைய தமிழ் உணர்வாளர்கள் ஒருபோதும் மறந்துவிட முடியாது. அந்த வகையிலே, அடுத்த மாத இறுதியிலே இலங்கையிலே நடக்க இருக்கின்ற காமன்வெல்த் மாநாட்டிற்கு இந்தியா எந்த வகையிலும் பிரதிநிதிகளை அனுப்பக்கூடாது என்ற வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள். எப்படி ராஜபக்சேவை போர்க் குற்றவாளி என்று பிரகடனப்படுத்த வேண்டுமென்ற ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டு வந்தார்களோ, எப்படி இலங்கையின்மீது பொருளாதாரத் தடை ஏற்படுத்த வேண்டுமென்ற வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானத்தை இந்த அவையிலே முன்மொழிந்தார்களோ, அதைப்போல ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை இந்த அவையிலே அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள். இதை வரவேற்பதில் எங்களுக்கெல்லாம் பெருமை.

ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டும், ஜனநாயகத்தை வளப்படுத்த வேண்டும், ஜனநாயகத்தைச் செழுமைப்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் காமன்வெல்த் என்கிற ஓர் அமைப்பே உருவாக்கப்பட்டது. காலனி ஆதிக்கத்தை எதிர்க்க வேண்டும், எங்கும் சர்வாதிகாரம் இருக்கக்கூடாது, எங்கும் இராணுவ ஆட்சி இருக்கக்கூடாது, ஜனநாயக நாடுகள் மலர வேண்டும் என்கிற

காரணத்திற்காக உருவாக்கப்பட்ட காமன்வெல்த் அமைப்பின் மாநாடு, ஜனநாயகத்தைப் படுகுழி தோண்டி புதைத்துக்கொண்டிருக்கின்ற ஒரு மண்ணிலே நடக்கிறது. அதை எதிர்த்து இன்று குரல் எழுப்பியிருக்கின்றார் உலக வீராங்கனை நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே காமன்வெல்த் மாநாடு நடக்கக்கூடாது, இந்தியா அதிலே பங்கேற்கக்கூடாது, இது இன்றைக்குத்தான் நடக்கப்போகின்ற ஒரு முன்னுதாரணம் இல்லை. ஏற்கெனவே, கனடா பங்கேற்கப் போவதில்லை. பல சந்தர்ப்பங்களிலே பங்கேற்பதில்லை. தற்காலிகமாக இலங்கையை காமன்வெல்த் கூட்டமைப்பிலிருந்தே தள்ளி வைக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்குச் சொல்கிறாரே அதுதான் ஜனநாயகத்தின் உச்ச இலக்கணம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே, பாகிஸ்தானிலே இராணுவ ஆட்சி இருந்தபோது பாகிஸ்தானை நாம் காமன்வெல்திலிருந்து நீக்கி வைத்திருக்கிறோம். ஏற்கெனவே, பிஜி தீவிலே இராணுவ ஆட்சி இருந்தபோது பிஜி தீவை காமன்வெல்திலிருந்து நாம் நீக்கி வைத்திருக்கிறோம்.

இலங்கைக்குப் பயணம் செய்த ஐ.நா. மனித உரிமை கவுன்சிலுடைய மனித உரிமை மீறல் ஆணையர் திருமதி நவநீதம் பிள்ளை அவர்கள் 'இங்கே சர்வாதிகாரத்திற்கான அனைத்துக் கூறுகளும் இருக்கின்றன' என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். திருமதி நவநீதம் பிள்ளை அவர்கள் அங்கே மனித உரிமை மீறல் இருக்கிறது, சர்வாதிகாரத்திற்கான கூறுகள் இருக்கின்றன, ஜனநாயகத்தின் அடிப்படைக் கூறுகள் மறுக்கப்பட்டிருக்கின்றன என்று மிகத் தெளிவாக அந்த மண்ணிலேயே பத்திரிகையாளர்களுக்கும், செய்தியாளர்களுக்கும் சொல்லியிருக்கிறார்கள். இதைவிட வேறு ஒன்றும் தேவையில்லை. அங்கேயிருக்கின்ற பல பத்திரிகையாளர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நீண்ட விளக்க உரைக்குப் பிறகு அதைப் பாராட்டுவதும், வாழ்த்துவதும் மட்டும் செய்யமுடியும். அந்த விஷயத்தின் உள்ளே நான் போக விரும்பவில்லை. ஒருவேளை அங்கே காமன்வெல்த் மாநாடு நடத்தப்பட்டால்--நடக்கும்--ஏற்கெனவே உள்ள மரபுபடி இனிமேல் காமன்வெல்த் மாநாட்டினுடைய தலைவராகவே அதிபர் ராஜபக்சே தேர்ந்தெடுக்கப்படுவார். எந்த நாட்டில் காமன்வெல்த் மாநாடு நடைபெறுகிறதோ அந்த நாட்டினுடைய அதிபர்

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2013 அக்டோபர் 24

காமன்வெல்த் அமைப்புக்கு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவது மரபு. இனி காமன்வெல்த் அமைப்புக்கு அவர்தான் தலைவர் என்றால்--கள்வனையே காவலுக்கு வைப்பது என்று நம்முடைய கிராமத்தில் பழமொழி சொல்வார்களே அதைப்போல் அல்லவா அமைந்துவிடும்?

இந்தத் தேதியை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்களே, அதுவே அவரின் உலகளாவிய சிறப்புக்கு ஓர் இலக்கணம். இன்றைக்குத்தான் இலங்கை வடகிழக்கு மாகாணத்தின் முதல் சட்டப் பேரவைக் கூட்டம் அங்கே தொடங்குகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கை வடகிழக்கு மாகாண முதல் கூட்டம் இன்றைக்கு அங்கே தொடங்குகிறது. அவர்களுக்கு வலிமை சேர்க்கின்ற வகையிலே, அங்கே ஜனநாயகத்தை நிலைநிறுத்துகின்ற வகையிலே இத்தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். காவல் துறைக்கும் அங்கே அதிகாரம் இல்லை, நில நிருவாகத்திற்கும் அதிகாரம் இல்லை. காவலும் இல்லாமல், நில நிருவாகமும் இல்லாமல் அங்கே ஒரு மாநில ஆட்சியின் முதல் சட்டப் பேரவைக் கூட்டம் இன்றைக்குத் தொடங்க இருக்கிறது அப்படிப்பட்ட சூழ்நிலையிலே--அவர்களுக்கு வலுசேர்க்கின்ற வகையிலே, உலக ஜனநாயகத்திற்கு வலுசேர்க்கின்ற வகையிலே, ஜனநாயகத்தின் தாயாக விளங்கிக் கொண்டிருக்கின்ற தமிழக முதலமைச்சர் போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தனித் தீர்மானத்தை வாழ்த்தி, வரவேற்று, பாராட்டி அமைகிறேன். உலகத்திற்கு முன்னுதாரணமான தீர்மானமாக இது அமையும், அமையும் என்று சொல்லி வாழ்த்துகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனப் படுகொலையை நடத்திய இலங்கை மண்ணில் காமன்வெல்த் மாநாட்டை நடத்தக் கூடாது, அந்த மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது, இந்தியா பெயரளவிற்குக்கூட பங்கேற்கக் கூடாது, இன்னும் சொல்லப்போனால், இலங்கையை

2013 அக்டோபர் 24] [முனைவர் செ.கு. தமிழரசன்]

காமன்வெல்த் கூட்டமைப்பிலிருந்து தற்காலிகமாக நீக்கி வைக்க வேண்டும் என்கிற ஓர் அழுத்தமான தீர்மானம், உலகம் முழுக்க பரவி வாழ்கின்ற ஒட்டுமொத்த மக்கள் சமூகத்தினுடைய, தமிழ் சமூகத்தினுடைய ஜனநாயக சக்திகளினுடைய உணர்வுகளை, உலகம் முழுக்க ஜனநாயக சக்திகள் வியந்து பார்த்து, நவீன மானுட சமூகத்தினுடைய உணர்வுகளை, ஜனநாயக உணர்வுகளை, சுதந்திர உணர்வுகளை, குடியாட்சி உணர்வுகளை உலகத்திற்கு நவீன காலத்திலே அழுத்தமாகப் பதிவு செய்து வருகிற தமிழகத்தின் 7 கோடிக்கு மேற்பட்ட தமிழ்ச் சமூகத்தினுடைய ஒப்பற்ற ஆட்சித் துறைத் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானம் உலகத் தமிழர்களினுடைய தீர்மானம், மட்டுமல்ல; உலக ஜனநாயக சக்திகளுக்கு வேண்டுகோள் வைக்கின்ற தீர்மானத்தை நம்முடைய தமிழக சட்டசபையிலே இன்று இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பது மிக, மிக அவசியமான ஒன்று. தமிழ்ச் சமூகத்திற்கு நம்பிக்கையைத் தருகிற ஆட்சித் துறை தலைவராக தமிழகத்திலே நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றார்கள் என்கின்ற அந்த நிலையையும் உறுதி செய்கின்றது இந்தத் தீர்மானம். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு குறிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 14-வது சட்டமன்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு, உலகத்திலேயே யாரும் இலங்கையை, குறிப்பாக ராஜபக்சேவை ஒரு போர்க் குற்றவாளி என்றோ, இலங்கையை இனப் படுகொலை செய்த நாடு என்றோ, அவ்வளவு அழுத்தமாக, அவ்வளவு விளக்கமாக, காரண காரியங்களோடு ஒப்பிட்டுச் சொன்னதில்லை என்ற அளவுக்கு, இதே சட்டமன்றத்திலே தீர்மானம் கொண்டு வந்து இலங்கைமீது பொருளாதாரத் தடை வேண்டும், ராஜபக்சேவை போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும், தனி ஈழம்தான் தீர்வு; தமிழ் மக்களினுடைய சுதந்திர ஜனநாயக வாழ்வுக்கு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று முழங்கினார்கள், ஜனநாயகத்தின்மீது பற்றுகொண்டிருக்கின்ற எங்கள் தமிழ்ச் சமூகத்தினுடைய ஆண்மையுள்ள ஒப்பற்ற ஒரே தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்த பிறகுதான் உலகத்திலே ஐ.நா. சபையிலேகூட இதுகுறித்து விழிப்பு கொண்டு இலங்கைக்கு

எதிரான தீர்மானங்களை மனித உரிமை அவையிலே கொண்டுவந்தார்கள். இந்தியா இலங்கைக்கு ஆதரவாக இருப்பதைக் கண்டித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலங்கையின்மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, ஐ.நா. சபை மன்றத்தின் வாக்கெடுப்பிலே அவர்கள் பங்கேற்கக் கூடாது எடுத்த முயற்சியின் காரணமாகத்தான் தமிழர்கள் ஓரளவு தன்னிறைவும், பாதுகாப்பும் பெற்றார்கள். உலகத்திலே இந்த நவீன காலத்திலே, இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு இப்படிப்பட்ட ஓர் இனப் படுகொலை நடந்தது கிடையாது. கல்லும் மண்ணும் தோன்றுவதற்கு முன்பு தோன்றியது தமிழ்ச் சமுதாயம், நேர்மை, உண்மை, மான மரியாதையுடன் வாழ்ந்த அச்சமூதாயத்தை ஈவு இரக்கமில்லாமல் அழித்து குழந்தைகளை, பெண்களை, முதியவர்களை உலகமே பதைபதைக்கக் கொன்ற காட்சிகளைப் பார்த்த பிறகும் கோடிக்கணக்கான மானிட சமூகத்தினர் தன்னுடைய உயிரைத் தந்து, பெற்றுத் தந்த தனி மனித உரிமையை ஜனநாயகத்தை விடுதலையைப் போற்றும் சுதந்திர உலகத்தில், நவீன சமூகத்தில், அத்தகைய இனப் படுகொலை நடந்த அதே மண்ணிலே அந்தக் காமன்வெல்த் மாநாடு நடைபெறுவது ஒட்டுமொத்த ஜனநாயக உணர்வுகளுக்கே எதிரானது. அப்படிப்பட்ட ஈவு இரக்கமில்லாத அந்த நாட்டில் அந்த மாநாட்டை நடத்துவதற்கு இந்தியா துணை நிற்கிறது என்பதுதான் விந்தை. இன்று மகாத்மா காந்தி இருந்திருந்தால், உண்மையாக காந்தியைப் போல் இலங்கையைக் கண்டித்திருப்பதற்கு யாரும் இருந்திருக்க முடியாது. உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு என்று சொல்லப்படுகின்ற இந்தியாவே, இலங்கைக்கு ஆதரவாக இனப் படுகொலை நடந்த அந்த மண்ணிலே காமன்வெல்த் மாநாடு நடைபெறுவதற்கு துணை நிற்பதைக் கண்டிக்கின்ற வகையில் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். இந்த வலிமையான தீர்மானத்தை மட்டும் அவர்கள் கொண்டுவரவில்லை. இதே காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்று கடந்த மார்ச் மாதம் 25 ஆம் தேதி கூறினார்கள். அக்டோபர் மாதம் 17 ஆம் தேதி இந்தியப் பிரதமருக்குக் கடிதமும் எழுதினார்கள். இந்தந்த காரணங்களுக்காக இனப் படுகொலை நடந்த இலங்கை நாட்டிலே நடைபெறும் மாநாட்டிலே இந்தியா பங்கேற்கக் கூடாது. கனடா பங்கேற்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி அம்மா அவர்கள் கவனமாக கடிதத்தின்

மூலமாக பிரதமர் அவர்களுக்குச் சொன்னார்கள். இப்போதும் தமிழர்களினுடைய நலனுக்காக, இன்னும் கவனமாகச் சொல்கிறார்கள், சிறந்த ஜனநாயகவாதியான அம்மா அவர்கள். இந்தச் சூழ்நிலையில் தமிழகத்தில் அரசியல் கட்சிகள் போராட்டம் நடத்துகின்றன. மாணவர் அமைப்புகள் போராட்டம் நடத்துகின்றன. ஒட்டுமொத்த தமிழ் மக்களினுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து, இந்தியா இந்த மாநாட்டில் பங்கேற்கக் கூடாது என்று மிகவும் கவனமாகக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

*முற்பகல் 11-45*

அந்தக் கடிதத்தைப் பாருங்கள். உலகத்தில் எந்த ஜனநாயகவாதியும் இந்தக் காலகட்டத்தில் அப்படி ஒரு கடிதத்தை எழுத முடியாது. அவ்வளவு மென்மையாக, அவ்வளவு சரியாக அந்த வாதத்தைச் சொல்லிவிட்டு, இன்னமும் சொல்கிறார்கள்; தமிழகத்தினுடைய அனைத்து அரசியல் கட்சிகளினுடைய கருத்து, ஒட்டுமொத்த மக்களினுடைய கருத்து. ஆகவே இந்தக் கருத்திற்கு மதிப்பளித்து, இந்தியப் பேரரசு இலங்கையில் நடைபெறவிருக்கின்ற காமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்காமல், அதை புறக்கணிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இதைவிட நாம் என்ன செய்ய முடியும். ஜனநாயக நாட்டில் வாழ்கிற, ஒரு ஜனநாயக அமைப்பில் இருக்கிற, நாம் இதைவிட என்ன செய்ய முடியும்? இந்தக் கருத்தைத்தான் நாம் வலிமையான இந்தத் தீர்மானத்தின் வாயிலாக வெளிப்படுத்த இருக்கிறோம். தமிழகத்தில் இருக்கிற, உலகம் முழுவதும் இருக்கிற தமிழ்ச் சமூகத்தினுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து, ஜனநாயக சமூகங்களினுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து, இனப் படுகொலை நடைபெற்று வருகின்ற இலங்கை நாட்டில் காமன்வெல்த் மாநாடு நடைபெறக் கூடாது, அதிலே இந்தியா பங்கேற்கக் கூடாது என்றும், இந்தியா பங்கேற்கக் கூடாது என்பது மட்டுமல்ல, காமன்வெல்த் அமைப்பிலிருந்தே இலங்கையை தற்காலிகமாகவாவது நீக்கிடல் வேண்டுமென்றும் மாண்புமிகு தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இன்று முன்மொழியப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

*__திரு. பி.வி. கதிரவன்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற நவம்பர் மாதம் நடைபெற இருக்கின்ற காமன்வெல்த் மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் இலங்கையை காமன்வெல்த் கூட்டமைப்பிலிருந்து தற்காலிகமாக நீக்க வேண்டுமென்ற முக்கியமான தீர்மானத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே முன்மொழிந்திருக்கின்றார்கள். உலகத்தில் வாழ்கின்ற ஒட்டுமொத்த தமிழர்களின் மனதில் ஓடுகின்ற எண்ணத்தைப் பிரதிபலிக்கின்ற வகையிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை இன்றையதினம் சட்டமன்றத்திலே கொண்டு வந்திருப்பதை அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி மனமார வரவேற்கின்றது. அதுமட்டுமல்ல, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தில் மூன்றாவது முறையாக முதல்வராக வந்தவுடன் இலங்கை அரசுக்கும், ராஜபக்சேவுக்கும் எதிராக இதே தமிழக சட்டமன்றத்தில் தீர்மானங்கள் கொண்டு வந்து நிறைவேற்றி, அதை இந்தியப் பேரரசுக்கு அனுப்பியும்கூட இன்னும் செவிசாய்க்க மறுத்து வருகிறது காங்கிரஸ் ஆட்சி. இந்தக் காமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டுமென்று இன்றையதினமும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்ப இருக்கின்றோம். இங்கே ஒட்டுமொத்த தமிழர்களும், தமிழகத்தில் இருக்கின்ற ஒட்டுமொத்த கட்சிகளும் ஒன்றுசேர்ந்து இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்குப் பாடுபடத் தயாராக இருக்கிறோம். அதேநேரத்தில் இந்தத் தீர்மானத்திற்கு மதிப்பளித்து காமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிப்பதில் ஆணித்தரமாக இருக்க வேண்டுமென்று காங்கிரஸ் அரசைக் கேட்டுக்கொள்கிறோம்.*

*மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல முறை மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியும்கூட அதைப் புறக்கணித்து வருகிறார்கள். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்தத் தீர்மானத்தை எங்களது அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சி மனமார வரவேற்று, வாழ்த்துகிறது. நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

*__திரு. ரா. சரத்குமார்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க பல தீர்மானங்களை முன்மொழிந்து நிறைவேற்றச் செய்திருக்கிற மாண்புமிகு*

2013 அக்டோபர் 24] [திரு. ரா. சரத்குமார்]

முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள், இன்றையதினம் ஒரு சிறந்த தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தில் முக்கிய சாராம்சமாக, எந்த ஒரு தலைவரும் எடுக்க முடியாத அளவிற்கு, ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமென்றால், "There is no leader in this country to take such decisive decision in bringing out a Resolution", என்ற வகையில் இங்கே விளக்கங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இலங்கைத் தமிழர்கள் சுதந்திரமாகவும், சிங்களருக்கு இணையாகவும் வாழ இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும்வரை காமன்வெல்த் கூட்டமைப்பிலிருந்து இலங்கை நாட்டைத் தற்காலிகமாக நீக்கிவைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று எந்த ஒரு தலைவரும் சொல்லியிருக்க முடியாது. இப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தீர்மானத்தை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்ததை அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்று அமர்கின்றேன். காமன்வெல்த் அமைப்பைப் பற்றியும், அந்த அமைப்பில் சொல்லப்பட்டிருக்கின்ற சாராம்சத்தைப் பற்றியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்தையும் சுருக்கமாக, சிறப்பாக எடுத்து வைத்திருக்கிறார்கள். நேரம் அதிகம் இல்லாத காரணத்தினால், இந்தத் தீர்மானம் நிச்சயமாக உலகளவில் அனைவராலும் வரவேற்கப்படும் என்பதை மட்டும் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கக்கூடிய அரசினர் தனித் தீர்மானத்தை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக நான் முதற்கண் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2008-2009 ஆம் ஆண்டுகளில் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்தேறிய மனித உரிமை மீறல்கள், சர்வதேச அளவில் ஒரு சுதந்திரமான விசாரணை ஆணையத்தின்மூலம் விசாரிக்கப்பட வேண்டுமென்று உலகெங்கும் வாழ்கின்ற தமிழ் மக்கள் மட்டுமல்ல, ஜனநாயகத்தை நேசிக்கின்ற நாடுகளெல்லாம் குரல்

கொடுத்துவருகின்ற இந்த நேரத்தில், இலங்கையில் காமன்வெல்த் மாநாடு நடைபெறுவதும், அதைத் தொடர்ந்து ராஜபக்சே காமன்வெல்த் அமைப்பினுடைய தலைவராகப் பொறுப்பேற்கிற வாய்ப்பும், இலங்கையில் வாழக்கூடிய ஈழத் தமிழ் மக்களுடைய வாழ்வுரிமையை எதிர்காலத்தில் நிச்சயமாகப் பாதிக்கும். எனவே, அப்படி ஒரு வாய்ப்பை ராஜபக்சேவுக்கு தந்துவிடக் கூடாது என்ற அடிப்படையில், எந்தக் காரணத்தைக்கொண்டும், நவம்பரில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது; இந்தியாவினுடைய பிரதமர் மட்டுமல்ல, இந்திய அரசின் சார்பாக ஒரு சாதாரண பிரதிநிதிகூடக் கலந்துகொள்ளக் கூடாது என்ற அடிப்படையில், இன்று இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் ஆகும். ஏற்கெனவே இதே அவையில், இதே காரணத்திற்காக ராஜபக்சேவை போர்க் குற்றவாளியாக அறிவிக்கவேண்டும் என்றும், அதுகுறித்து சர்வதேச, சுதந்திர விசாரணை ஆணையம் விசாரிக்கவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதனைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் இன்று கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை உலகெங்கும் வாழக்கூடிய தமிழ் மக்கள் நிச்சயமாக வரவேற்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். பாரதப் பிரதமர் அவர்கள் ஏற்கெனவே இதுகுறித்து குறிப்பிட்டிருந்தாலும்கூட, இன்று நிறைவேற்றப்படுகின்ற தீர்மானத்தையொட்டி நிச்சயமாக இந்த மாநாட்டிலே கலந்துகொள்ளப்போவதில்லை என்ற அறிவிப்பை நாம் நிச்சயம் எதிர்பார்க்கலாம். அதைத்தான் இந்திய அரசும் செய்யும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

அதேபோல, இடைப்பட்ட காலத்திலே இலங்கை அரசை காமன்வெல்த் கூட்டமைப்பிலிருந்து விலக்கி வைக்கவேண்டுமென்ற ஓர் ஆணித்தரமான வாதத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எடுத்துவைத்திருக்கிறார்கள். எனவே, இந்திய அரசு, கடந்த காலங்களைப்போல, நாம் நிறைவேற்றிய அனைத்துத் தீர்மானங்களையும் உதாசீனப்படுத்தியதைப்போல நடந்துகொள்ளாமல், நிச்சயமாக உலகெங்கும் வாழக்கூடிய 8 கோடிக்கும் மேற்பட்ட தமிழ் மக்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு காமன்வெல்த் மாநாட்டிலே கலந்துகொள்வதிலிருந்து

2013 அக்டோபர் 24] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]
நிச்சயமாக விலகி நிற்கும், நிற்க வேண்டும் என்று கேட்டு புதிய தமிழகம் கட்சியின் சார்பாக இந்தத் தீர்மானத்தை முழுமனதோடு வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசின் சார்பாக முன்மொழிந்திருக்கக்கூடிய தீர்மானம் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களுடைய எண்ணத்தின் பிரதிபலிப்பாக, உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தக்கூடிய வகையிலே அமைந்திருக்கின்றது. அந்தத் தீர்மானத்தை மனித நேய மக்கள் கட்சி உளமார வரவேற்கிறது.

இந்தத் தீர்மானத்தில் இரண்டு அம்சங்கள் இடம்பெற்றிருக்கின்றன. முதலாவது அம்சம், அடுத்த மாதம் கொழும்பிலே நடைபெறக்கூடிய காமன்வெல்த் மாநாட்டிலே இந்தியாவின் சார்பாக எந்த ரூபத்திலும், அரசினுடைய துணைச் செயலாளர் என்ற அளவிலும்கூட யாரும் பங்குகொள்ளக் கூடாது என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே முன்மொழிந்திருக்கிறார்கள். ஆஸ்திரேலியாவில், பெர்த் நகரில் 2011 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் காமன்வெல்த் மாநாடு நடைபெற்றபோது, இலங்கையிலே நடைபெற்ற மனித இனத்திற்கு எதிரான பேரழிவுகளைப் பற்றியெல்லாம் விரிவாகப் பேசப்பட்டது. அந்த மாநாட்டிலே பேசிய கனடா நாட்டினுடைய பிரதமர் Stephen Harper மிக வலிமையாக கொழும்பிலே அடுத்த உச்சி மாநாடு நடைபெறக்கூடாது என்பதை வலியுறுத்தினார். அப்போது இலங்கையினுடைய அதிபர் மஹிந்தா ராஜபக்சே பேச எழுந்தபோது, திரு. ஹார்பா சொன்ன வார்த்தைகளை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன். அதை இந்திய அரசும்கூட உற்று நோக்கவேண்டுமென்பதற்காகப் பதிவு செய்ய விரும்புகின்றேன். ராஜபக்சே பேச எழுந்தபோது, 'இரத்த வாடை வீசும் இந்த மனிதனின் பேச்சை எங்களால் செவி மடுக்க முடியாது' என்று சொல்லி, அந்த அவையிலிருந்து அவர் வெளிநடப்புச் செய்தார். நம்முடைய தொப்புள்கொடி உறவு மக்களாக இருக்கக்கூடிய தமிழர்களின் எல்லா வகையான மனித உரிமைகளையும் காலில் போட்டு மிதித்து, சர்வதேச விதிமுறைகள்

அனைத்தையும் குழிதோண்டிப் புதைத்து, ஒன்றரை இலட்சம் மக்களை படுகொலை செய்து, பாதுகாப்பு அரண் என்று ஐ.நா. சபை அறிவித்த இடங்களிலும்கூட, மருத்துவமனைகளிலும்கூட Cluster bombs-ஐ, கொத்து குண்டுகளை வீசி ஏராளமான மக்களைக் கொன்று குவித்த, இலங்கையிலே நடைபெற்ற அந்தப் பேரழிவுகளை நிச்சயமாக மனித நேயம் உள்ள யாரும் மறுக்கமுடியாது.

*முற்பகல் 11-55*

அதுதவிர, 1 இலட்சத்து 45 ஆயிரம் மக்கள் இன்றுவரை காணாமல் இருக்கின்றார்கள். போர் முடிந்த பிறகும்கூட, மறு நிவாரணம் (Rehabilitation measures) அங்கே நடைபெறவில்லை என்பதை ஐ.நா.—வினுடைய மனித உரிமை ஆணையாளரே மிகத் தெளிவாக எடுத்துரைத்திருக்கின்றார். இப்படிப்பட்ட நிலையிலே, கொழும்பிலே காமன்வெல்த் மாநாடு நடைபெறும். அதன் விளைவாக அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு ராஜபக்சே காமன்வெல்த் அமைப்பினுடைய தலைவராக வருவது என்பது அவர்மீது சர்வதேச அரங்குகளிலே நடைபெற்று வரக்கூடிய விசாரணைகளுக்கும், அவர்மீது நடவடிக்கை எடுப்பதற்கும் ஒரு மிகப் பெரிய தடையாக இருக்கும். எனவே, இந்திய அரசு மிக வலிமையாக இந்த மாநாட்டிலே பங்குகொள்ளாமல் இருப்பதோடு மட்டுமல்லாமல், இன்று உலகத்திலே காமன்வெல்த் நாடுகளிலிருந்து நீக்கப்படுவதற்கு தகுதியுடைய ஓர் அரசு இருக்குமேயானால், அது நிச்சயமாக இலங்கை அரசாகத்தான் இருக்கும் என்று வலியுறுத்தவேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காமன்வெல்த் நாடுகளினுடைய Charter-ஐ அதாவது, கொள்கைப் பிரகடனத்தைப்பற்றி தங்களுடைய உரையிலே மேற்கோள் காட்டினார்கள். அந்தக் கொள்கைப் பிரகடனம்கூட நேற்று இரவு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்ட The Parliamentarian-னுடைய சமீபத்திய இதழிலே இடம் பெற்றிருக்கிறது, 16 அம்சங்கள் அதிலே இருக்கின்றன. இந்த 16 அம்சங்களையும் விரிவாக மேற்கோள் காட்டுவதற்கு இது பொருத்தமான நேரம் இல்லை. இருந்தாலும் ஒருசிலவற்றை மட்டும் நான் இங்கே பேசுகின்றேன். முரண்பட்ட சமூகங்களுக்கிடையிலே சகிப்புத்தன்மை பேணப்பட வேண்டுமென்பது அந்த காமன்வெல்த் அமைப்பினுடைய கொள்கைப் பிரகடனங்களில் ஒன்று. இன்று இலங்கையிலே

2013 அக்டோபர் 24][முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

இந்துக்களுடைய கோயில்கள், கிறித்துவர்களுடைய சர்ச்சுகள், அதேபோல முஸ்லிம்களினுடைய பள்ளிவாசல்களெல்லாம் ராஜபக்சே அரசாங்கத்திலே அடித்து நொறுக்கப்படக்கூடிய ஒரு நிலையைப் பார்க்கின்றோம். அந்த 16 அம்சங்களிலே ஒன்று, கருத்துரிமை. இலங்கையைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கக்கூடிய Sunday Leader பத்திரிகையினுடைய ஆசிரியராக இருந்த லசந்தா விக்ரமசிங்கே என்பவர் தன்னுடைய பத்திரிகையிலே, “நான் இந்த அரசால் விரைவில் கொல்லப்படுவேன்” என்று எழுதினார்; அவர் எழுதியதைப்போல சில வாரங்கள் கழித்து அவர் கொல்லப்பட்டிருக்கின்றார். இலங்கையிலே 60-க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் காணாமல் போய்விட்ட ஒரு சூழலைப் பார்க்கின்றோம். சட்டத்தின் ஆட்சி அங்கே நடைபெற வேண்டுமென்று சொல்கிறார்கள். இலங்கையினுடைய தலைமை நீதிபதியாக இருந்த ஷிரானி பண்டாரநாயகே அவர்கள், எந்தவிதமான நியாயமான காரணங்களுமின்றி நீக்கப்பட்ட ஒரு நிலையைப் பார்க்கின்றோம்.

அதேபோல, அதிகாரப் பரவலை காமன்வெல்த் அமைப்பினுடைய உறுப்பு நாடுகள் பின்பற்ற வேண்டுமென்று சொல்கிறார்கள். இலங்கையிலே தமிழ் பேசக்கூடிய இந்துக்களும், தமிழ் பேசக்கூடிய முஸ்லிம்களும் இலங்கை அதிபராக வரமுடியாது என்ற சட்டத்தையே ராஜபக்சே இயற்றி இருக்கின்றார். எனவே, ஒரு நாடு காமன்வெல்த் அமைப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்றால் அதற்கு முழு தகுதிவாய்ந்த நாடாக இலங்கை இருக்கின்றது என்பதைத்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தீர்மானம் வலியுறுத்துகிறது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** இதோ முடித்துவிடுகிறேன். 1995 இல் நைஜீரியாவிலே கென் சாரோ-வைவா என்ற மனித உரிமை ஆர்வலரும், 10 பேரும் தூக்கிலிடப்பட்டதற்காக அந்த நாடு நான்கு ஆண்டுகள் காமன்வெல்த் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டது.

இலட்சக்கணக்கான மக்களைக் கொன்ற இலங்கையும் நிச்சயமாகக் காமன்வெல்த் கூட்டமைப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும்; தமிழக மக்களுடைய உணர்வுகளைப்

பிரதிபலிக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை மத்திய அரசு முழுமையாக உணர்ந்து இந்தத் தீர்மானத்திற்குச் செவிசாய்க்க வேண்டும்; நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.*

**திரு. கே. கோபிநாத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே வாழுகிற நம்முடைய தமிழ்ச் சகோதரர்கள்மீது மத்திய அரசாங்கம் மிகவும் அக்கறை கொண்டுள்ளது என்பதற்குச் சில சான்றுகளை மட்டும் நான் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.*

*இலங்கைத் தமிழர்களுக்காக வாதாடிய, எங்களுடைய கட்சித் தலைவர் திரு. ராஜீவ் காந்தி அவர்களை நாங்கள் இழந்துவிட்டோம். இருந்தாலும்கூட, இன்றுவரை மத்திய அரசாங்கம் இலங்கையில் வாழுகிற தமிழர்களுக்காக பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது. சமீபத்தில்கூட கிட்டத்தட்ட ரூ.4,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, நம்முடைய தமிழ்ச் சகோதரர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல, ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முழுவதும் இலங்கைத் தமிழர்களுக்காகச் செலவு செய்யப்படுகிறதா என்பதைக் கண்டறிவதற்கு குழு அமைக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகிறது.*

*இன்றைக்கு நம்முடைய தமிழக அரசு கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை, தமிழக காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவராகிய நானும், எங்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் முழுமனதாக ஆதரிக்கிறோம்.*

*மேலும், இந்தத் தீர்மானத்தின்மூலம் ஒரு காலகட்டத்திலே நமது நாட்டிற்கும், இலங்கை நாட்டிற்கும் உள்ள உறவு பாதிக்கப்படுமானால், அங்கு வாழுகின்ற நமது தமிழ்ச் சகோதரர்களுக்கு எந்தவிதமான உதவிகளையும் நம்மால் செய்ய முடியாமல் போய்விடும் என்ற அச்சமும் எங்களுக்கு இருக்கின்றது.*

*அதுமட்டுமல்ல, நமது இந்திய நாட்டின் எல்லையில்கூட பாதுகாப்புப் பிரச்சினை வந்துவிடும் என்ற அச்சமும் எங்களுக்கு*

2013 அக்டோபர் 24] [திரு. கே. கோபிநாத்]

இருக்கின்றது என்பதை மட்டும் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தத் தீர்மானத்தை நாங்கள் முழுமனதாக ஆதரிக்கிறோம். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக வழிமொழிந்து, அதை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்தத் தீர்மானம், ஒட்டுமொத்த தமிழர்களுடைய உணர்வை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளதோடு, இனப் படுகொலை நடைபெற்ற இலங்கையில் காமன்வெல்த் மாநாட்டினை நடத்தக்கூடாது; அந்த மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக்கூடாது; முற்றிலுமாக புறக்கணிக்க வேண்டும்; பெயரளவுக்குக்கூட இந்திய நாட்டின் சார்பாகப் பிரதிநிதிகள் அந்த மாநாட்டில் கலந்துகொள்ளக்கூடாது என்கின்ற அழுத்தமான தீர்மானமாகவும் அமைந்துள்ளது.

“இலங்கைத் தமிழர்கள் சுதந்திரமாகவும், சிங்களர்களுக்கு இணையாகவும் வாழ இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும்வரை, காமன்வெல்த் கூட்டமைப்பிலிருந்து இலங்கை நாட்டைத் தற்காலிகமாக நீக்கி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய பேரரசை தமிழ்நாடு சட்டப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது” என்ற இந்தத் தீர்மானம் முற்றிலும் சரியானது மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ் இனத்திற்காக இந்த அவையில் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய தீர்மானமாக நாங்கள் கருதுகிறோம். ‘இலங்கையில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா நிச்சயமாக கலந்துகொள்ளக்கூடாது’ என்ற உணர்வை இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய தமிழர்கள் மட்டுமல்ல, உலகம் முழுவதும் இருக்கக்கூடிய 8 கோடி தமிழ் மக்களும் இந்தியாவிற்கு எடுத்துக்காட்டக்கூடிய ஒரு தீர்மானமாக இன்று முன்மொழியப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தீர்மானம் அமைந்திருக்கிறது. அந்த முறையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி இந்தத் தீர்மானத்தை வரவேற்கிறது.

[2013 அக்டோபர் 24

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமன்வெல்த் கூட்டமைப்பு என்பதே பிரிட்டிஷ் அரசுக்கு நாம் அடிமைப்பட்டு இருந்ததை, காலனி நாடாக இருந்ததை, ஞாபகப்படுத்துகிற ஒரு நினைவுச் சின்னமாகத் தொடர்கிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்த காமன்வெல்த் கூட்டமைப்பே அவசியமில்லை என்ற கருத்தை ஏற்கெனவே தொடர்ந்து சொல்லிவருகிறது. அதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பதுபோல காமன்வெல்த் அமைப்பு அவசியமே இல்லை என்பதை நான் இங்கே வலியுறுத்திச் சொல்கிறேன்.*

*இலங்கை அரசு பதின்மூன்றாவது அரசியல் சட்டத் திருத்தத்தினை அமல்படுத்தவில்லை. அமல்படுத்தாதது மட்டுமல்ல, அதை நீர்த்துப்போகச் செய்யவும் தொடர்ந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. பதின்மூன்றாவது அரசியல் சட்டத் திருத்தத்தை எந்த அளவில் எல்லாம் அவர்கள் கெடுக்க நினைக்கிறார்கள் என்று இப்போது அங்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கூறிய கருத்துக்கள்மூலம் நாம் அறிவோம்.*

*இலங்கை இராணுவம், தமிழர் பகுதியிலே நடத்திய அட்டூழியங்கள், படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் எண்ணிலடங்காதவை. கல்விச் சாலைகளை விடவில்லை, மருத்துவமனைகளை விடவில்லை, அனைத்திலும் குண்டு வீசினார்கள். இப்படிப்பட்ட போக்கை எதிர்த்து சர்வதேச அமைப்பிலே நம்முடைய கருத்துகளை ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். சர்வதேச அமைப்புகள் இலங்கைப் பிரச்சினையிலே தலையிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம், விசாரணை தேவையென்று நாம் வலியுறுத்தவும் செய்திருக்கிறோம்.*

*சமீபத்திலே திருமதி நவநீதம்பிள்ளை அங்கே சுற்றுப்பயணம் மேற்கொண்டு, வெளியிட்ட கருத்துகளும் இங்கே கவனிக்கத்தக்கவை. ஆகவே, நம் அண்டை நாடான இலங்கையிலே உள்ள அரசு,*

2013 அக்டோபர் 24] [திரு. அ. சவுந்தரராசன்]
தமிழ் மக்களுக்கு இழைத்திருக்கின்ற கொடுமைகளின் விளைவுகளில் இருந்து பாதிக்கப்பட்ட அம் மக்கள் நிவாரணம் பெறவும், தவறிழைத்தவர்கள் தண்டிக்கப்படவும் இந்திய அரசு இராஜ்ய அழுத்தங்களைத் தீவிரப்படுத்த வேண்டும், தீவிரப்படுத்த வேண்டும் என்று இந்தத் தருணத்திலே நான் சார்ந்திருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வலியுறுத்தி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற, அரசினர் தனித் தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வழிமொழிந்து வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காமன்வெல்த் மாநாடு இலங்கையில் நடைபெறப் போகிறது என்கின்ற செய்தி வந்ததிலிருந்து அந்த மாநாடு இலங்கையில் நடைபெறக்கூடாது, அப்படியே அங்கு நடைபெற்றாலும் இந்தியா அதிலே பங்கேற்கக்கூடாது என்று தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கலைஞர் அவர்கள் குரல் கொடுத்து வருகிறார்கள்.

25-3-2013 அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயற்குழுக் கூட்டத்திலும், அதைப்போல் 16-7-2013 அன்று டெசோ அமைப்பின் சார்பில் நடைபெற்ற கூட்டத்திலும் இதுகுறித்து விரிவான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல, தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்கள், இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு இதுகுறித்து விரிவாகக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். தி.மு. கழகத்தின் சார்பில் மட்டுமல்ல, பல்வேறு கட்சிகளின் சார்பில், தமிழின உணர்வுள்ள அமைப்புகள், ஆர்வலர்கள், ஆதரவாளர்கள், இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தமிழக முதலமைச்சர் அவர்களே பிரதமர் அவர்களுக்கு 25-3-2013 அன்றும் 17-10-2013 அன்றும் இதுகுறித்துக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். காமன்வெல்த் மாநாடு இலங்கையில் நடைபெறக்கூடாது என்று காமன்வெல்த் நாடுகளினுடைய தலைமை நீதிபதிகள் 27 பேர்கள்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2013 அக்டோபர் 24

இதுகுறித்து ஒருமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, தங்களது கடுமையான எதிர்ப்பை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிப்பது என்று கனடா நாட்டின் சார்பில் அகில உலகத் தமிழர்களும் அறிவித்திருக்கிறார்கள். காமன்வெல்த் மாநாடு இலங்கையில் நடைபெறக்கூடாது என்று ஆஸ்திரேலியா நாட்டில் நடைபெற்ற மாபெரும் கையெழுத்து இயக்கத்தில் பங்குகொண்டு, ஆஸ்திரேலிய நாட்டின் முன்னாள் பிரதமர் திரு. பிரேசர் அவர்களே அதிலே கையெழுத்து போட்டிருக்கிறார்கள்; ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும், இதற்கு விரிவான வகையிலே கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதேபோல, காமன்வெல்த் மனித உரிமை அமைப்பு, ஆஸ்திரேலிய மனித உரிமை சட்ட மையம் ஆகியவை தங்களுடைய எதிர்ப்பை முறையாகப் பதிவு செய்திருக்கின்றன.

*பிற்பகல் 12-10*

தமிழக அளவிலே, 'இந்தியா காமன்வெல்த் மாநாட்டில் கலந்துகொள்ளக் கூடாது' என்று ஒன்றுபட்டு குரல் கொடுப்பது உள்ளபடியே மகிழ்ச்சிக்குரிய ஒன்று; பாராட்டுக்குரிய ஒன்று. பரம்பரை பரம்பரையாக தமிழினத்தின்மீது கொண்டிருக்கக்கூடிய மாறாப் பகையை, தீரா வெறுப்புணர்வை இலங்கை சிங்கள அரசு சிறிதளவும் குறைத்துக்கொள்ளவில்லை. எனவேதான் அப்படிப்பட்ட நிலையில், இலங்கையில் காமன்வெல்த் மாநாடு நடைபெறும் என்றால், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு காமன்வெல்த் அமைப்பின் அவைத் தலைவராக ராஜபக்சேதான் இருப்பார். அதனால், ஐம்பத்து நான்கு நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கக்கூடிய அமைப்பின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் ஒருவரை நீதி விசாரணைக்கு உட்படுத்துவது ஓர் இக்கட்டான சூழ்நிலையை நிச்சயமாக உருவாக்கும். இந்தச் சூழலில்தான், இந்தியா தன்னுடைய கண்டனத்தினைப் பதிவு செய்யக்கூடிய வகையில், நிச்சயமாக காமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும். நிறைவாக நான் கூறிட விரும்புவது, உலகத் தமிழர்களிடம் ஒன்றுபட்டு இருக்கக்கூடிய உணர்வைப் போற்றி மதிக்கத்தக்க வகையில், காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக் கூடாது என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான்

2013 அக்டோபர் 24] [திரு. மு.க. ஸ்டாலின்]

வலியுறுத்தி, அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்று அமைகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே முன்மொழிந்து இருக்கின்ற அரசினர் தீர்மானத்தின் முதல் பகுதி எதிர்பார்த்தது; அதனுடைய பிற்பகுதி எதிர்பாராதது. எதிர்பார்த்தது நிறைவேறியதற்கும், எதிர்பாராமல் கிடைத்த ஆதாயத்திற்கும் முதலில் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் துவங்கிய உடனே, ‘இலங்கையில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக் கூடாது’ என்ற நிலையை தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றும் என்று உலகமெங்கும் உள்ள தமிழர்கள் எதிர்பார்த்தார்கள். அதனை, முதல் நிகழ்ச்சியாக, இன்றையதினமே நிறைவேற்றியிருக்கிறார்கள். நேற்றையதினம் இரங்கல் தீர்மானம் என்கின்ற காரணத்தினால் வேறு அலுவல்கள் இல்லை. முதல் நிகழ்ச்சியாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பது, உலகமெல்லாம் வாழ்கின்ற தமிழர்களின் நெஞ்சங்களில் பால் வார்த்தது போல் நிச்சயமாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காமன்வெல்த் மாநாடு கொழும்பில் நடைபெறுவது, அதுவும் அதிபர் மஹிந்தா ராஜபக்சே தலைமையில் நடைபெறுவது என்பது, ஜீவகாருண்ய சபையை, கசாப்புக் கடைக்காரர் தலைமை வகித்து நடத்துவது போன்றுதான் அந்தக் காமன்வெல்த் மாநாடு நடைபெறும் என்பதில் ஐயமில்லை. ஆனால், ஒன்றைத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக, இந்திய அரசினுடைய வெளியுறவுக் கொள்கை, இந்தத் தீர்மானத்திற்கு எந்தவகையில் மரியாதை தரும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஏற்கெனவே பல நேரங்களில் கடிதங்கள் எழுதியதையும் அவற்றால் எந்தப் பலனும் ஏற்படவில்லை என்பதையும் தெரிவித்தார்கள். இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இந்திய அரசு ஒரு தெளிவான கொள்கையை மேற்கொள்ள வேண்டும். எல்லாரும் என்ன

[திரு. ச. இராமச்சந்திரன்] [2013 அக்டோபர் 24

நினைக்கின்றார்கள் என்றால், “தமிழ்நாட்டில் இருக்கிறவர்கள் இப்படித்தான் தீர்மானம் போடுவார்கள்; எல்லாக் கட்சியினரும் சேர்ந்து போடுவார்கள்; அதுவும் இப்பொழுது நாடாளுமன்றத் தேர்தல் வருகிற நேரம், ஆகையினால் இதில் ஒன்றும் வியப்பு இல்லை. ஆனால், இந்திய அரசு என்பது தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியா முழுவதற்கும் சேர்த்து என்ன கொள்கை என்றுதான் பார்க்க வேண்டும்; ஆகையினால், பிரதமர் அவர்கள் காமன்வெல்த் மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டும்” என்ற ஒரு கருத்து பலமாக டெல்லியிலே உலவுகிறது. இது வெறும் தமிழர் பிரச்சினைதான், அதுவும் தேர்தலுக்காகத்தான் நாம் இப்படி தீர்மானிக்கின்றோம் என்று யாராவது கருதுவார்களேயானால், அவர்களையெல்லாம் நான் பார்த்துக் கேட்பது இதுதான்--அப்படியானால், கனடா நாட்டு பிரதமர் வர மறுப்பானேன். Stephen Harper-க்கு என்ன தமிழர்களா ஓட்டுப்போடப் போகிறார்கள்? இதுவரையிலே நடைபெற்ற எல்லா காமன்வெல்த் மாநாடுகளிலும் கலந்துகொண்ட எலிசபெத் இராணியார், இந்தக் காமன்வெல்த் மாநாட்டிலே கலந்து கொள்ளாமல் தனது மகன் பிரின்ஸ் சார்லஸை அனுப்புவானேன்? இங்கிலாந்து நாட்டின் பிரதமராக உள்ள David Cameron அவர்கள் இங்கே வருகிறபொழுது, அங்கேயுள்ள வெளியுறவுத் துறையினுடைய பாராளுமன்றக் குழுவினர் அதைக் கண்டிப்பானேன்? ஆகவே, இது ஏதோ தமிழ்நாட்டிலே உள்ள அரசியல் தலைவர்கள், குறிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தேர்தல் ஆதாயத்திற்காக அல்லது தமிழர்களின் உரிமை ஒன்றை மட்டுமே கருதிச் செய்கிறோம் என்று பொருள் அல்ல. தமிழர் உரிமை மீறல் என்பது மனித உரிமை மீறல். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நாட்டினுடைய அரசு, அந்த நாட்டிலுள்ள மக்களையே கொடுமைப்படுத்தினால் என்ன பரிகாரம்? அவர்களே கொலைத் தொழிலிலே இராணுவத்தையும், காவல் துறையையும் பயன்படுத்துவார்களேயானால், அதற்கு யார் பொறுப்பு? இறையாண்மை என்று தலையிடாமல் இருந்துவிட முடியுமா?

*பிற்பகல் 12-15*

ஐ.நா-வினுடைய சாசனத்திலே, பகுதி இரண்டு (4)-ல் இறையாண்மையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அதேநேரத்தில், மனித உரிமை மீறல்கள் என்றால், அதில் தலையிடுவதற்கு சர்வதேச நாடுகளுக்கு உரிமை உண்டு. இன்னும்

2013 அக்டோபர் 24] [திரு. ச. இராமச்சந்திரன்]

சொல்லப்போனால், இராணுவ ரீதியாகவே தலையிடலாம். அதைத் தடுத்து நிறுத்தலாம். மனித குலம் அழிவதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. ஆகவே, இந்திய அரசு, 'பாலுக்கும் காவல்; பூனைக்கும் தோழன்' என்ற நிலையில் தன்னுடைய வெளியுறவுக் கொள்கையை வகுத்துக்கொள்ளக் கூடாது. அதனுடைய விளைவுதான் இன்றைக்கு ஏற்பட்டுள்ள பல்வேறு குழப்பங்கள்.

இன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோதுகூட இங்கே குறிப்பிட்டார்கள். 2011-ல் இங்கே இந்தக் காமன்வெல்த் மாநாடு நடைபெற வேண்டுமென்று அப்போது வாதிட்டுப் பெற்றது இந்தியாதான். கனடாவை எதிர்த்து, இங்கிலாந்தை எதிர்த்து, ஆஸ்திரேலியாவை எதிர்த்து, இங்கே காமன்வெல்த் மாநாட்டை நடத்த வேண்டுமென்று வாதிட்டுப் பெற்றதே இவர்கள்தான். ஆனால் அதேநேரத்தில், இன்றையதினம் பிரதமர் மட்டும் போகமாட்டார்; மற்றவர்கள் போனாலும் போகலாம் என்கின்ற ஒரு நிலையை எடுக்கிறார்கள். இந்திய அரசு என்ன நினைக்கிறது என்றால், நாம் சென்றால்தான், இலங்கை அரசோடு பேசி, அங்கே உள்ள தமிழர்களுக்கு உரிமை பெற்றுத் தர முடியுமென்று கருதுகிறது.

"இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு?"

என்று சொல்லக்கூடிய திருவள்ளுவரே மிக அழகாகச் சொல்கிறார்.

"சொல்லப் பயன்படுபவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்"

என்கிறார். பெரியவர்களுக்கு நாம் சொன்னால் அவர்கள் தெரிந்துகொள்வார்கள். ஆனால், கீழ்மக்களை கரும்பைப்போல, நாம் கசக்கினால்தான் அவர்கள் பயன்படுவார்கள் என்று திருவள்ளுவரே சொல்கிறார். இலங்கையினுடைய நிலைமை அப்படி. 13-வது அரசியல் சட்டத் திருத்தத்தை எப்பொழுதோ ஒன்றுமில்லாமல் செய்துவிட்டார்கள். தமிழர் பகுதி என்பதை நிராகரித்துவிட்டு, கிழக்கு மாகாணம், மேற்கு மாகாணம் இணைந்த பகுதியை 2006-லே இரத்துச் செய்துவிட்டார்கள். இப்பொழுதும் அங்கு நிலம் அல்லது காவல் துறை, ஆகியவற்றினுடைய அதிகாரங்களைக் கொடுக்கப் போவதில்லை. ஆக, நம்பக் கூடாதவர்களை நம்புவதில் இந்திய அரசு தெளிவான கொள்கை முடிவை எடுக்க வேண்டும்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [2013 அக்டோபர் 24

மனித உரிமை மீறல், போர்க் குற்றம், இனப் படுகொலை இந்த மூன்றையும் இலங்கை அரசு செய்திருக்கிறது. ஆனால், அவர்கள் இப்பொழுது மிரட்டுகிறார்கள். எங்களுக்குச் சீனா இருக்கிறது; பாகிஸ்தான் இருக்கிறது; இந்தியாவைப்பற்றி நாங்கள் கவலைப்பட வேண்டியதில்லை என்று மிரட்டுகிறார்கள். டெல்லியிலே இருக்கிறவர்கள்கூட என்ன நினைக்கிறார்கள் என்றால், இவர்கள் எங்கே சீனாவுடன் போய்விடுவார்களோ, பாகிஸ்தானுடன் போய்விடுவார்களோ; அதனால் இங்கேயிருக்கின்ற நம்முடைய செல்வாக்கு தடுக்கப்பட்டுவிடுமோ என்று சிந்திக்கின்றார்கள்.

ஆனால், உண்மையில் என்ன நிலைமையென்றால், இது இன்று, நேற்றல்ல; டி.எஸ். சேனநாயகா காலத்திலேயிருந்தே அவர்கள் இந்தியாவிற்கு எதிர்ப்பாக இதைச் செய்து வந்திருக்கிறார்கள். அன்றைக்கு மலையகத் தமிழர்களுடைய குடியுரிமையைப் பறித்தார்கள். பண்டித ஜவஹர்லால் நேரு அதை எதிர்த்தார். காலம் காலமாக அங்கே இருந்தவர்கள் அவர்கள். வேறு ஒரு பாவமும் செய்யவில்லை. முதன்முதலில் இலங்கையில் நடந்த தேர்தலில் கம்யூனிஸ்டுகளுக்கு ஓட்டுப் போட்டார்கள். அதன் காரணமாக, மலையகத் தமிழர்களுடைய குடியுரிமையைப் பறித்துவிட்டார்கள்.

இதைச் சரியாக உணர்ந்து முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தெளிவாக 1983 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திலே குறிப்பிட்டார். இலங்கை அவர்களுடைய விருப்பத்திற்கேற்ப, மேலைநாடுகளோடு மிகுந்த தொடர்பு வைத்துகொண்டு, —இதேபோல் இந்தியாவை மிரட்டினார்கள்—. அப்பொழுது அவர் சொன்னார், Sri Lanka is not just another country. நாங்கள் சும்மா இருக்கமாட்டோம். மற்ற நாடுகள் மாதிரி இலங்கை அல்ல என்று சொன்னார். 1983 ஆம் ஆண்டு Parliament-லே சொன்னார். ஆகவே, Sri Lanka is not just another country. இன்றைக்குச் சீனாவையும், பாகிஸ்தானையும் வைத்து கொண்டு மிரட்டுகிறார்கள் என்று இவர்கள் பயப்படுவதில் அர்த்தமேயில்லை.

பிற்பகல் 12-20

இன்னும் சொல்லப்போனால், வங்கதேசம் விடுதலையானபோது, அந்த நேரத்திலே பிரதமராக இந்திரா காந்தி அவர்கள் இருந்தார்கள். இதே இலங்கை என்ன செய்தது என்றால்,

2013 அக்டோபர் 24] [திரு. ச. இராமச்சந்திரன்]

பாகிஸ்தானுக்கு உதவி செய்தது. அவர்களுக்குப் பெட்ரோல் எல்லாம் கொடுத்து, விமானப் படைக்கு உதவி செய்தார்கள்; அமெரிக்காவின் பக்கம்தான் இருந்தார்கள். அமெரிக்காவினுடைய formidable 7th fleet-மிகப் பெரிய ஏழாவது கப்பல் படை வங்காள விரிகுடாவிற்கு உள்ளே வந்தது. அது வருவதற்குள், வங்கதேசத்திற்கு விடுதலை பெற்றுத் தந்துவிட்டோம்.

இலங்கைக்கு ஆதரவாக சீனாவோ, பாகிஸ்தானோ வருகின்ற அளவிற்கு, இங்கே ஒன்றும் அதைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள். ஆகையினால், இலங்கை மிரட்டுகிறது என்றால், அதற்கு அஞ்சவேண்டிய அவசியமில்லை. எந்த நேரத்திலேயும் இந்தியாவினுடைய sphere of influence-க்கு கட்டுப்பட்டுத்தான் இலங்கை இருக்கவேண்டும். எனவே, மத்திய அரசு நிச்சயமாக மறுபரிசீலனை செய்து, தெளிவான கொள்கை முடிவினை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காமன்வெல்த் மாநாட்டினைப் புறக்கணிப்பதோடு மட்டுமல்ல; 2014 மார்ச் மாதத்திலே, U.N.H.R.C.-ஐ.நா. மனித உரிமைக் கமிஷன் வரப் போகிறது. மனித உரிமைகளை முன்னெடுத்துக் காப்பாற்றுகின்ற மகத்தான நாடு இந்தியா என்று கொள்கைரீதியிலே இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டு, இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு ஆதரித்து, என் உரையை முடிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வானின் காயங்கள் கறுப்பு மேகங்கள்; மண்ணின் காயங்கள் தரிசான பாகங்கள்; நிலவின் காயங்கள் நிலையில்லா உருவங்கள்; வெளிச்சத்தின் காயங்கள் வெற்று நிழற்பிம்பங்கள்; மலையின் காயங்கள் மடிந்து விழும் மடுக்கள்; உறவின் காயங்கள் உரசல் பேதங்கள்; உணர்வின் காயங்கள் உணராத உள்ளங்கள்; தலைமையின் காயங்கள் தம் மக்கள் படும் வேதனைகள்.

தமிழின மக்கள் எங்கிருந்தாலும், அவர்களுக்கு இழைக்கப்படும் துன்பம், அநீதி, இன்னல், கொடுமை ஆகியவற்றைத் தன் துன்பமாகக் கருதும், தொண்டுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் (மேசையைத் தட்டும் ஒலி) முன்மொழியப்பட்டுள்ள இந்தத் தீர்மானம் மிகச் சிறப்பு வாய்ந்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் மட்டும்தான் உலகத் தமிழர்களை உய்விக்க முடியும், உயர்த்த இயலும். தாய்ப் பாசத்தோடு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழின மக்களை அரவணைக்கிறார்கள்; அன்பு காட்டுகிறார்கள். கரும்பு நெஞ்சத்தோடு அன்பு காட்டினாலும், இரும்புக் கரம் கொண்டு எதிரிகளை எதிர்ப்பார்கள். இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளை, மனித உரிமை மீறல்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் என்றும் அனுமதிக்கமாட்டார்கள்.

"மரம் தனக்காகப் பழுப்பதில்லை; ஆறு தனக்காக ஓடுவதில்லை. அதைப்போலவே சான்றோர்களும் தமக்காக வாழ்வதில்லை" என்றார் குரு நானக். "எனக்காக ஏதுமில்லை; என்வாழ்வு எல்லாமும் தமிழின மக்களுக்கே" (மேசையைத் தட்டும் ஒலி) என்னும் துறவறத்தில் துடிக்கின்ற தூய தொண்டு இதயம் கொண்டவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள். தமிழினம் உயர அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருபவர் மாண்புமிகு அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஓய்வறியா உழைப்பினால், வழிகாட்டுதலினால் தமிழகம் மட்டுமல்ல; இந்தியாவும், இலங்கையில் உள்ள தமிழ் மக்களும் நலம் பெறுவர்; விடியலுக்கான நேரம் வந்துவிட்டது; வெற்றிக்கான காலம் கனிந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தைக் கொண்டுவந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்மானத்தை நான் ஆரம்பத்தில் முன்மொழிந்தபோதே, அதை முன்மொழிவதற்கு முன்பாகவே, இதுகுறித்து என்னென்ன கருத்துகள் தெரிவிக்க வேண்டுமென்று நான் விரும்பினேனோ, அத்தனை கருத்துகளையும் தெரிவித்துவிட்டேன். ஆகவே, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவை உறுப்பினர்களை, நான் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2013 அக்டோபர் 24] [பேரவைத் தலைவர்]

*ஏற்போர் 'ஆம்' என்க.* *(ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க.*

*மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.*

*மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12-25*

## 5. அரசினர் தீர்மானம்

### விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றை தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியத், (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2013) இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"*

*என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க.* *(ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க.* *(இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*